2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) பெரியாறு உற்பத்தியாகும் இடத்தில் அணைகட்டப்படுவதால் தமிழகம் பாதிக்கப்படுதல்

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை விதிஎண் 42-க்கு இணங்க கீழ்க்காணும் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியம் ஒன்றைப் பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டி அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். அதாவது—

" தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குப் பாசனத்துக்குப் பயன்படும் பெரியாறு நதியின் மீது, அந்த நதி உற்பத்தியாகும் இடத்தில் அணை கட்டப்படுவதால் நமது மாவட்டங்களின் பாசனத்துக்குக் கிடைக்கும் தண்ணீர் குறைந்து போகும் நிலை ".

பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரியாற்றில் தண்ணீர் போதுமானதாக இல்லை. அந்த அணையில் கூட போதுமான அளவு தண்ணீர் இல்லை. பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் கேரள அரசு அந்த நதி உற்பத்தியாகும் இடத்தில் இடமலையாற்றில் அணை கட்டுவதாகத் தெரிகிறது. அவ்வாறு அங்கே அணை கட்டுவது (Riparian rights) முன் பாத்தியதை உரிமையை மீறியதாகும். அதனால் மதுரை, இராமநாதபுரம் பகுதிகளுக்குக் கிடைத்து வரும் தண்ணீர் குறையும். அதனால் மக்கள் பீதியும், பயமும் கொண்டிருக்கிறார்கள். இதைவிட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியம் இருக்க முடியாது. அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்ற நிலையில் இதைப் பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மன்றத்தில் எடுத்துக் கொண்டு விவாதிக்கப் படக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது உறுப்பினர்கள் இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்ல நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சபையை ஒற்றி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டது அல்ல என்று கருதினாலும், இதுபற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும் காரணத்தால் எனது அனுமதியை மறுக்கிறேன்.

(ii) தமிழகத் திரைப்படங்கள் மகாராஷ்டிரத்தில் திரையிடப்பட சிவ சேனையின் எதிர்ப்பு.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42 ஆவது விதியின்படி கீழ் காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டி அறிவிக்கை கொடுத்துள்ளேன். அதாவது

" தமிழகத்தில் எடுக்கும் படங்களைத் திரையிடக்கூடாதென்று சிவாஜி சேனை எதிர்ப்பதால் தொழில் பாதிக்கப்பட்டு அதனால் சுமார் 15,000 பேர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும் நிலை "